செ.வெ.எண்: 265 நாள்: 19.04.2019

**புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டத்தில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.**

**சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவு.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி பகுதிகளில் ஏற்பட்ட சட்டம் ஒழுங்கு பிரச்சனையை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.04.2019) பொன்னமராவதி காவல் நிலையத்திற்கு நேரில் சென்று திருச்சி மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு.வி.வரதராஜு இ.கா.ப., அவர்கள் தலைமையில் சட்டம் ஒழுங்கு பராமரிப்பது தொடர்பாக பிரதிநிதிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். திருச்சி சரக காவல்துறை துணைத்தலைவர் திருமதி.ஆர்.லலிதாலெட்சுமி இ.கா.ப., அவர்கள், தஞ்சை சரக காவல்துறை துணைத்தலைவர் திரு.ஜெ.லோகநாதன் இ.கா.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் திரு.ஜியாஉல்ஹக் இ.கா.ப., (திருச்சி), திரு.எஸ்.செல்வராஜ் (புதுக்கோட்டை) ஆகியோர் உடனிருந்தனர்.

அதன் பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடன் தெரிவித்ததாவது.

நேற்றையதினம் வாட்ஸ்அப்பில் அவதூறு தகவல் பரவியது. இதுகுறித்து காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் காவல்துறை உயர் அலுவலர்கள் தலைமையில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது நிலைமை சீரடைந்துள்ளது. மேலும் பொன்னமராவதி தாலுகாவில் இன்று 19.04.2019 முதல் 21.04.2019 வரை மூன்று நாட்களுக்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு விரைவில் பேருந்து போக்குவரத்து இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுத்துபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவு. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**